




கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா. சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சான்ஸத் ஆதர்ஷ் கிராம யோஜனா (ளுயுபுலு) திட்டத்தின் கீழ், வடக்கு தாமரைக்குளம் ஊராட்சியில் செயல்படுத்தப்பட்டு வரும் பணிகளின் முன்னேற்றம் குறித்து, அனைத்து துறை அரசு அலுவலர்களுடனான மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக நாஞ்சில் கூட்டரங்கில் இன்று (22.08.2016) நடைபெற்றது. உதவி திட்ட அலுவலர் (உட்கட்டமைப்பு) திருமதி. ராணி உடனுள்ளார்.

செ.வெ.எண்: 559/2016 நாள்: 22.08.2016

**பத்திரிகை செய்தி**

**சான்ஸத் ஆதர்ஷ் கிராம யோஜனா (SAGY) - மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கூட்டம்**
**சான்ஸத் ஆதர்ஷ் கிராம யோஜனா (SAGY) திட்டத்தின் கீழ்**
**அனைத்து துறை அலுவலர்களுக்கான திட்ட விளக்க கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.**

கன்னியாகுமரி மாவட்டத்தில் 2015-16-ம் ஆண்டில் SAGY திட்டத்தின் கீழ் அகஸதீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்தில் வடக்கு தாமரைகுளம் ஊராட்சியை மாண்புமிகு மத்திய இணை அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன், எம்.பி. அவர்கள் (சாலை போக்குவரத்து, நெடுஞ்சாலைதுறை மற்றும் கப்பல்துறை) மாதிரி கிராமமாக தேர்வு செய்துள்ளார். மேற்படி கிராம ஊராட்சிகளில் அனைத்து நிலைகளிலும் மேம்பாட்டினை ஏற்படுத்தும்விதமாக செயல் திட்டம் வகுக்கப்பட்டு அதனடிப்படையில் பணிகள் செயலாக்கப்பட வேண்டும் என அனைத்து துறை அலுவலர்களை மாவட்ட ஆட்சி தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

இக்கூட்டத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.த.கெட்சி லீமா அமலினி, திருமதி.ராணி, உதவி திட்ட அலுவலர்(உட்கட்டமைப்பு), ஆகியோர் மற்றும் அனைத்துத் துறையை சார்ந்த மாவட்ட நிலை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.